## +2 வணிகவியல்

## பாடம் 10 : ஆட்சேர்ப்பு முறைகள்

**1. ஆட்சேர்ப்பு பொருள்:** ஒரு நிறுவனத்தில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு பொருத்தமான நபர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி செயல்முறை ஆட்சேர்ப்பு எனப்படுகிறது.

**2. ஆட்சேர்ப்பு வரைவிலக்கணம். பெர்க்மேன் மற்றும் டெய்லர் அவர்கள் கூற்றுப்படி** ஆட்சேர்ப்பு என்பது தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருக்கும் இடத்தை அறிவது,அடையாளம் காண்பது மற்றும் ஈர்க்கும் செயல்முறை ஆகும்.

**3. ஆட்சேர்ப்புக்கான காரணங்கள்.** 1.பணியாளரின் ஓய்வு 2. பணியாளரின் இறப்பு.3. பணியாளரின் வேலை துறப்பு 4. பணியாளரின் தகுதி இழப்பு 5. பணியாளரின் பதவி நீக்கம்.

**4. ஆட்சேர்ப்பின் படிநிலைகள் / செயல் முறைகள் ( Recruitment Process)**

1. ஆட்சேர்ப்பு திட்டமிடல் 2. காலிப்பணியிடங்களை தீர்மானித்தல்.
3. வளங்களை கண்டறிதல். 4. விளம்பரம் குறித்த தகவலை உருவாக்குதல்.
5. பொருத்தமான விளம்பர முறையை தேர்ந்தெடுத்தல். 6.தேர்வு செயல்பாட்டிற்கு வழி வகுத்தல் 7. மதிப்பீடு மற்றும் கட்டுப்பாடு.

**5. ஆட்சேர்ப்பு வளங்கள் / ஆட்சேர்ப்பு வழிமுறைகள்.**
பணியாளர்களை தேர்ந்தெடுக்க இரண்டு வழி முறைகள் உள்ளன.
1.அக வளங்கள் 2. புற வளங்கள்

**6. புற வளங்களை மேலும் இரு வகையாகப் பிரிக்கலாம்**
1.நேரடி வளங்கள் 2. மறைமுக வளங்கள்.

**7. அக வளங்கள்.** இடமாற்றம், மேம்படுத்துதல் ,பதவி உயர்வு, பதிவி இறக்கம், பழைய ஊழியர்களின் பரிந்துரை, வேலை சுழற்சி, ஓய்வுபெற்ற ஊழியர்கள், சார்ந்தவர்கள், முந்தைய விண்ணப்பதாரர்கள், கையகப்படுத்துதல் மற்றும் சேர்க்கை.

**8. புற வளங்கள்** நேரடி வளங்கள். விளம்பரங்கள், பரிந்துரை இல்லாத விண்ணப்பதாரர்கள், நேர்முகத்தேர்வு, வளாகத் தேர்வு, தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு, போட்டி நிறுவனங்கள் மற்றும் இணையவழி ஆட்சேர்ப்பு.

**9. மறைமுக வளங்கள்.** பணியாளர் பரிந்துரை,அரசு.ஃபொது வேலை வாய்ப்பு அலுவலகங்கள், வேலை வாய்ப்பு முகவர்கள், வேலை வாய்ப்பு ஆலோசனை மையங்கள்,தொழில்முறை சங்கங்கள்,பதிலாயனுப்புதல்,வாய் வார்த்தை, பணியாளர் ஒப்பந்தக்காரர்கள், வேலை வாய்ப்பு இணைய தளங்கள், புறத்திறனிட்டல, மற்றும் புறம்பான வேட்டை.

**10. அக வளங்கள் -விவரி**

**1.இடமாற்றம்.** இது எளிமையான வழி.ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்களை தேவைப்படும் இடத்திற்கு பணி மாற்றம் செய்வது.

**2.மேம்படுத்துதல்.** கீழ் மட்ட நிலையில் உள்ள பணியாளர்களை செயல் திறன் மதிப்பீட்டு முறை மூலம் மேல் மட்ட நிலை நோக்கி நகர வைத்தல்.

**3.பதவி உயர்வு.** பணி மூப்பு மற்றும் தகுதி அடிப்படையில் பணியாளர்களுக்கு கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலைக்கு பணி புரிய வாய்ப்பு அளிக்கப்படும்.

**4பதவி இறக்கம்.** பணியில் தொடர்ந்து குறைவான செயல்திறன் வெளிப்படுத்தும் பணியாளரை கீழ்நிலை பணிக்கு மாற்றுவது பதவி இறக்கம் எனப்படும்.

**5.பழைய ஊழியர்களின் பரிந்துரை.** பழைய பணியாளர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களை வேலைக்கு அமர்த்துவது.

**6.வேலை சுழற்சி.** பணியாளர்களை மாற்றுப் பணியினை மேற்கொள்ளச் செய்வதன் மூலம் அவர்கள் அனைத்து விதமான பணிகளை மேற்கொள்ள முடியும். இது வேலை சுழற்சி ஆகும். (Job Rotatin)

**7.தக்க வைத்தல்.** ஓய்விற்குப் பின்பும் பணியாளர்களை நிறுவனத் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்வது தக்க வைத்தல் எனப்படும்.

**8.ஓய்வுபெற்ற ஊழியர்கள்.** தகுதி மற்றும் அனுபவம் கொண்ட ஓய்வுபெற்ற ஊழியர்களை காலியிடத்தில் பணியமர்த்திக் கொள்ளலாம்,

**9.சார்ந்தவர்கள்.** பணியில் இருக்கும்போது இறந்த பணியாளர்களின் வாரிசுக்கு வேலை வழங்கலாம்.

**10.முந்தைய விண்ணப்பதாரர்கள்.** கடந்த காலத்தில் விளம்பரப்படுத்தப்பட்ட பணிகளுக்கு விண்ணப்பித்த ஆனால் தேர்ந்தெடுக்கப்படாத விண்ணப்பதாரர்களை தேவைப்படும் நேரத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**11.கையகப்படுத்துதல் மற்றும் ஒன்றிணைப்புகள்.** ஒரு நிறுமம் மற்றொரு நிறுமத்தை வாங்கும் போது அல்லது தன்னுடன் இணைக்கும் போது அந்த நிறுவனப் பணியாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**11. புற வளங்கள். I. நேரடி வளங்கள்.**

**1.விளம்பரங்கள்.** தினசரிப் பத்திரிகைகளில் பணியின் தன்மை, அதற்க்கான தகுதி மற்றும் அனுபவம், சம்பள விபரம், விண்ணப்பிக்கும் முறை, ஆகியவற்றைக் குறிப்பிட்டு விளம்பரம் செய்யலாம்.

**2.கோரப்படாத விண்ணப்பதாரர்கள்.** தன்னிச்சையாக வேலை வேண்டி விண்ணப்பிதோரை நிறுமம் வாய்ப்பு கொடுத்து பயன்படுத்திக்கொள்ளலாம்.

**3.நேர்முகத்தேர்வு** .வேலை வேண்டி நிறுவனத்திற்கு நேரிடையாக வருபவர்களை நேர்முகத்தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கலாம்.

**4.வளாகத்தேர்வு. (Campus recruitment)** கல்வி நிறுவனங்களுக்கு நேரிடையாக சென்று தகுதி உள்ளோரை தேர்ந்தெடுப்பது.

**5.தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு.** சாதாரண அல்லது திறனற்ற தற்காலிக ஊழியர்கள் இந்த வழியின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**6.போட்டி நிறுவனங்கள்.** போட்டி நிறுவனங்களில் உள்ள தகுதியான நபர்களை உயர் பதவி,உயர் சம்பளம்,மற்றும் இதர பலன்கள் கொடுத்து தம்முடைய நிறுவனத்தில் பணியாற்ற ஈர்க்கும் செயலே பணியாளர் வேட்டை எனப்படுகிறது.

**7.இணைய வழி ஆட்சேர்ப்பு.** ஆட்சேர்ப்புக்கான தவிர்க்க முடியாத புற வள ஆதாரம் ஆகும். தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக தகுதிடைய பணியாளர்களை உலகளவில் இணையத்தின்மூலம் பெறமுடியும்.

**II.மறைமுக வளங்கள்.**

**1.பணியாளர் பரிந்துரை.** நிறுவனத்தில் இருக்கும் ஊழியர்கள் காலியிடங்களுக்கு பொருத்தமான நபர்களைப் பரிந்துரைப்பதைக் கருத்தில் கொண்டு அவர்களைப் பணியமர்த்தலாம்.

**2.அரசு / பொது வேலைவாய்ப்பு அலுவலகங்கள்.** இந்த அலுவலகங்களில் பதிந்துள்ள தகுதியான நபர்களின் பட்டியலைப் பெற்று அதிலிருந்து பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

**3.தனியார் வேலை வாய்ப்பு முகவர்கள்.** இந்த முகவர்கள் உரிய தகவல்களைத் தந்து வேலை வழங்குவோரையும் வேலை தேடுவோரையும் இணைக்கிறார்கள்.

**4.வேலை வாய்ப்பு ஆலோசனை மையங்கள்.** இந்த நிறுவனங்கள் பண அடிப்படையில் வாடிக்கையாளர் நிறுவனங்களின் சார்பாக ஆட்சேர்ப்பு பணியினை மேற்கொள்கிறது.இது புறத்திறனிட்டல் ஆட்சேர்ப்பு செயல்முறை என்றும் அழைக்கப்படுகிறது.

**5.தொழில்முறை சங்கங்கள்.** அதிக திறமை மற்றும் தொழில்நுட்ப அறிவுள்ள சரியான நபரை தேடும் நிறுவனங்கள், இதற்காக பட்டய கணக்காளர்கள் சங்கம், இந்திய மருத்துவ சங்கம், பொறியியல் சங்கம் மற்றும் இந்திய மேலாண்மை சங்கம் போன்றவற்றை அணுகலாம்.

**6.பதிலாயனுப்புதல்.** ஒரு நிறுவனத்தில் பணியில் இருப்பவரை குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட பணிக்காக நியமித்துக்கொள்வது பதிலாயனுப்புதல் எனப்படும்.

**7.வாய் வார்த்தை.** நிறுவனத்திற்கு தெரிந்த நபர்கள் மூலமாக வேலை தேடுவோர் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**8.பணியாளர் ஒப்பந்ததாரர்கள்.** ஒப்பந்ததாரர்கள் மூலம் திறமையற்ற பணியாளர்களை நியமித்துக்கொள்ளலாம்.

**9.வேலை வாய்ப்பு இணையதளங்கள்.** வேலை வாய்ப்பு இணையதளங்களைப் பயன்படுத்தி தகுதி உள்ள பணியாளர்களை தேர்வு செய்து கொள்ளலாம்.

**12. ஆட்சேர்ப்பில் சமீபகால போக்குகள்.**

**புறத்திறனிட்டல்;** சேவைக் கட்டணங்களை வழங்கும், நிறுவனங்களின் விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து சரியான பணிக்கு சரியான நபரை தேர்ந்தெடுத்து கொடுக்கும் பணியினை செய்யும் நிகழ்வு புறத்திறனிட்டல் எனப்படும். இதை செய்யும் நிறுவனங்கள் புறத்திறனிட்டல் நிறுவனங்கள் எனப்படும்.

**13. புறத்திறனிட்டல் மூலமாக ஆட்சேர்ப்பு செயல்முறை.**

1.தேவைகளைப் புரிந்துகொள்ளுதல்.
2.விளம்பரம்
3.திரையிடல் / கூர்ந்தாய்வு
4.சரிபார்த்தல்
5.சுயவிவர சமர்ப்பிப்பு
6.நேர்முகம் செயல்முறை & கருத்தளிப்பு
7.தேர்வு & பின்தொடர்தல் .

**14. கவர்தல் / வேட்டையாடுதல்.** போட்டி நிறுவனங்களில் உள்ள தகுதியான பணியாளர்களுக்கு நிதி மற்றும் நிதி சாராத சலுகைகளை கூடுதலாக வழங்கி அப்பணியாளர்களை கவர்ந்து பணியில் அமர்த்துவது கவர்தல் அல்லது திறமையானவர்களை வேட்டையாடுதல் எனப்படும்.